# வந்த வேலையை விட்டுவிட்டு... ...கிருஷ்ணதாசன்

இளைஞர்களே! 'நீ நீயாகவே இரு என்ற தலைப்பில்' சென்ற வாரம் உரையாடினோம். நீங்கள் நீங்களாகவே இருப்பதற்கு நீங்கள் என்ன காரணத்திற்காக இறைவனால் படைக்கப்பட்டீர்களோ அதை நோக்கிச் செல்ல வேண்டும். ஏனென்றால் இறைவன் எல்லாவற்றையும் சமப்படுத்தவே விரும்புகிறான். மனிதன் அறியாமையால் அச்சமநிலையைச் சிதைக்கிறான்.

சில மாதங்களுக்கு முன் ஒரு அழகான இளம் பெண் என்னைச் சந்தித்தாள். முகத்தில் சிறிது கலவரம். 'என்னம்மா எப்படி இருக்கிறாய்' என்றேன். பல பிரச்சனைகள் என்று கூறி பிரச்சனைகளைக் கூறினாள். 'ஆம்! வந்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலை பார்த்தால் அப்படித்தான் இருக்கும். இப்போது நீ வந்த வேலையை உணர்ந்து அதைச் செய்யப் பார். எனது புத்தகத்தில் அதற்கான வழிமுறைகளைக் கூறியுள்ளேன்' என்று கூறி அனுப்பினேன். இதை எழுதும் போது எனது மனம் பின்னோக்கிச் செல்கிறது.

என்னிடம் படித்த மாணவி அவள். படிக்கும் போது 'உனக்கு கற்பித்தல் நன்றாக இருக்கும். வேதியியலில் நாட்டம் உள்ளது. ஏன் ஆடுத்த வருடம் நீ இளம் அறிவியல் (வேதியியல்) பாடத்தில் சேரக் கூடாது' என்றேன். அவள் 'எனக்கு பொறுமையில்லை. ஆசிரியப்பணிக்கு பொறுமை தேவை' என்றாள். இன்னும் ஐந்து அல்லது ஆறு வருடங்களில் உனக்கு மனப்பக்குவம் வரலாம். உன்னைப் போல கல்வியில் சிறந்த மாணவிகள் ஆசிரியப் பணிக்கு சென்றால் நாட்டுக்கு நல்லது' என்றேன். அந்த வருட தேர்வு முடிவுகள் வந்தன. பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றாள். எனக்கு ஆசிரியப் பணியில் விருப்பமில்லை என்று கூறி பொறியியல் கல்லூரியில் சேர்ந்துவிட்டாள். ஒவ்வொரு வருடமும் பல்வேறு பிரச்சனைகள். என்னிடம் தொலைபேசியில் அடிக்கடி புலம்புவது உண்டு. நானும் தகுந்த ஆலோசனைகளை கூறுவதுண்டு. மறுபடியும் பொறியியல் துறையில் பட்ட மேற்படிப்பு சேர்ந்துவிட்டாள். அங்கும் பல பிரச்சனைகள். காதல் தோல்வி வேறு. எப்படியோ முன்னால் செய்த புண்ணியத்தால் பிரச்சனையிலிருந்து தப்பினாள். ஆனாலும் இன்னும் மனக்குழப்பம் அவளை விட்டபாடில்லை.

இன்னொரு நண்பர் திரு. ஜெயச்சந்திரன் ஆதித்தனார் கல்லூரியில் எனக்கு அறிமுகமானவர். பத்தாவது வகுப்பு பொதுத் தேர்விலும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்விலும் மற்ற பாடங்களை விட கணித பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்றவர். ஆனால் வணிகவியல் பாடத்தில் தான் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன என்று கூறி அவரது பெற்றோர் கல்லூரியில் வணிகவியல் துறையில் சேர்த்துவிட்டனர். அங்கு பல பிரச்சனைகளைச் சந்தித்தார். ஆசிரியர்கள் 'நீயேல்லாம் படிக்க லாயக்கில்லை' என்றனர். கடைசியில் ஒரு வைராக்கியத்துடன் படித்து முதல் வகுப்பில் தேறினார். வணிகவியலில் பட்ட மேற்படிப்பு சேர்ந்தார். படித்துக் கொண்டிருக்கும் போதே வங்கி ஒன்றில் வேலை கிடைத்தது. அங்கு வேலை செய்யும் போதே கணிதத்தில் அதிக நாட்டம் வந்தது. கணிதத்தை மிக எளிதாகச் செய்வதற்கு பல கணித சூத்திரங்களை கண்டுபிடித்தார். பல கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் சென்று கணிதத்தை எளிதாக செய்வதெப்படி என்று விளக்கவுரை ஆற்றினார். கி.பி. 1 முதல் 10,000ம் ஆண்டு வரை எந்த தேதியை கொடுத்தாலும் சில விநாடிகளில் எந்த கிழமை என்று சொல்லும் ஆற்றல் பெற்றார். வங்கி பணியின் போது கடுமையான நோயால் பீடிக்கப்பட்டார். எவ்வளவுதான் மருத்துவம் பார்த்தும் அவருக்கு குணமாகவில்லை. வங்கியை விட்டு வேளியே வந்த பின் யோகாசனங்கள் மற்றும் இயற்கை வைத்தியத்தால் குணமானார். வணிகயவியலை விட கணிதத்

துறையில் அவர் சாதித்தவை பல. கணிதத் துறையில் அவரது சாதனைகள் இந்தியா புக் அஃப் ரெக்கார்ட்ஸ், ஆசியா புக் அஃப் ரெக்கார்ட்ஸ் மற்றும் வேர்ல்டு ரெக்கார்டு யுனிவர்சிட்டி, யுனைடேட் கிங்டம் ஆகியவற்றில் பதிவாகியுள்ளதாகக் கூறினார். இப்பல்கலைக் கழகம் அவருக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது. இப்போது நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்.

திரைப்பட பாடலாசிரியை கவிஞர் தாமரை பற்றி பலரும் அறிந்திருப்பீர்கள். அவருடைய கடந்தகால வாழ்க்கையைப் பற்றி பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்காது. ஆம், அவர் ஒரு பொறியியல் பட்டதாரி. படித்து வேலைக்குச் சேர்ந்தார். திருமணமும் நடந்தது. திருமண வாழ்க்கைத் தோல்வி, விளைவு மணமுறிவு. வேலையிலும் திருப்தியில்லை. மிகவும் மன உளைச்சலுக்குள்ளானார். மிகவும் கஷ்டப்பட்டார். பலராலும் உதாசீனப்படுத்தப்பட்டார்.

பின்னர் அவரது தொழில் படிப்படியாக மாறியது. திரு. கௌதம் மேனன் இயக்கிய மின்னலே என்ற படத்தின் வசீகரா பாடல் மூலம் பெரும் புகழ் வந்தடைந்தது. அதன் பிறகு நடப்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

ஜெ. கே. ரௌலிங் பற்றி தெரிந்திருப்பீர்கள். இளங்கலைப் பட்டம் (இலக்கியம்) பெற்றவர். இலண்டனில் சிறிது காலம் பணி செய்தார். அப்போது அம்மா இறந்துவிட்டார். செய்யும் பணியிலும் திருப்தியில்லை. வேலையை விட்டு விலகினார். பின்னர் போர்ச்சுகல் நாட்டில் ஆங்கில ஆசிரியையாக வேலை செய்தார். திருமணமும் நடந்தது. திருமண வாழ்க்கையிலும் தோல்வி. கணவனைப் பிரிந்தார். கைக்குழந்தையுடன் ஸ்காட்லாண்டு சென்றார். வறுமையின் கொடுமை. கடுமையான மன உளைச்சல். தற்கொலைக்கு முயன்றார். முயற்சியில் தோல்வியடைந்தார். எழுத்துப் பணியில் ஏற்கனவே இருந்த நாட்டத்தால் புத்தகம் எழுத ஆரம்பித்தார். ஹாரி பாட்டர் நாவல் அவருக்கு பெரும் புகழையும் செல்வத்தையும் நிம்மதியான வாழ்க்கையையும் கொடுத்தது.

மேற்கூறியவர்கள் தவறான துறையைத் தேர்ந்தெடுத்ததால் தண்டிக்கப்பட்டாலும், ஏற்கனவே செய்த புண்ணியத்தின் விளைவால் இறுதியில் நிம்மதியான வாழ்வைப் பெற்றனர்.

இன்று மெத்தப் படித்த இளம் பெண்கள் பலர் போலிச் சாமியார்களிடமும், போலிச் சத்குருக்களிடமும் மாட்டிக் கொண்டு தவிப்பதற்குக் காரணம் வந்த வேலையைச் செய்யாது வேறு வேலை செய்ததனாலேயே!

சச்சின் டெண்டுல்கர், ஏ. ஆர். ரஹ்மான், இளையராஜா போன்ற சாதனையாளர்கள் சில பிரச்சனைகள் இருந்தாலும் ஏற்கனவே செய்த புண்ணியத்தால் சரியாக வழிநடத்தப்பட்டனர்.

கிட்டதட்ட 38 வருடங்கள் எனது வாழ்வில் பல்வேறு பிரச்சனைகள். சுமார் முப்பது வருடங்களுக்கு முன் எனது பிறப்பின் நோக்கத்தை இறைவன் உணர்த்தினான். என் பணியைச் செவ்வனே செய்வதற்காக ஆழ்ந்த தியானத்தில் சில எண்ணங்களைத் திணித்தேன். அதன் விளைவுகள் கடந்த 30 வருடங்களாக எனக்கு பல பிரச்சனைகளைக் கொடுத்தன. பெரும்பாலும் ஒரு சாதாரண மனிதன் அனுபவிக்கும் அனைத்து பிரச்சனைகளையும் அனுபவித்தேன். அவற்றின் காரணங்களையும், தீர்வுகளையும் உணர்ந்தேன். சில நேரங்களில் சிலரை கொலை செய்யலாமா? என்று கூட நினைத்தேன். அந்தளவுக்கு தூண்டப்பட்டேன். ஆழ்ந்து தியானித்து காரணம் கேட்டபோது 'வந்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலை பார்க்கிறாயே' என்ற பதில் கிடைத்தது. பல்வேறு பிரச்சனைகளிலிருந்தும் பகவான் கிருஷ்ணன் என்னைக் காப்பாற்றினார்.

இன்று பல பட்டதாரிகள் வேலையின்றி தவிப்பதற்கும் தற்கொலை மணமுறிவு போன்றவற்றிற்கும் அவர்கள் தவறான துறையை தேர்ந்தேடுத்ததே காரணம். இதற்கு மூல காரணம் பெற்றோர்களின் அறியாமையும் தவறான கல்வித் திட்டமுமே!

ஒரு உதாரணம் கூறுகிறேன். உங்கள் பையனை பள்ளிக்கு அனுப்புகிறீர்கள். பையன் பள்ளிக்கு ஒழுங்காக செல்லாமல் பள்ளி வேலை நேரத்தில் வேறு எங்கு சென்றாலோ நண்பர்களுடன் சுற்றினாலோ நீங்கள் என்ன செய்வீர்கள். முதலில் கண்டிப்பீர்கள். அதையும் மீறி அவர்கள் செயல்பட்டால் பின்னர் கடுமையாக தண்டிப்பீர்கள். அப்படித்தானே! அதைப் போல் தான் இறைவனும். இறைவன் ஒரு சமநிலையை உருவாக்க நினைக்கிறான். உங்களை ஒரு காரணத்திற்காக படைத்துள்ளான். அதை உணர்ந்து அந்த வேலையை செய்யாமல் வேறு எதையாவது செய்து கொண்டிருந்தால் மற்றவர்களை கருவியாக்கி உங்களை தண்டிக்கிறார். நீங்கள் அதை அறியாமல் கருவிகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் தான் இன்று காவல் நிலையங்களும், நீதிமன்றங்களும், மருத்துவமனைகளும் நிரம்பி வழிகின்றன. அவ்வளவே. கல்வி நமது குறிக்கோளை உணரச் செய்து பின்பற்ற செய்ய வேண்டும். அதாவது வந்த வேலையை உணரச் செய்து பின்பற்ற செய்ய வேண்டும்.

நீங்கள் வந்த வேலையை உணர்வதற்கு அதாவது நிம்மதியாக வாழ்வதற்கு முதல் வழி பாவத்தைக் குறைத்து புண்ணியத்தை அதிகரிக்க வேண்டும். அதற்கு இயற்கையின் செயல்பாடுகளை அறிந்திருந்தால் மிகவும் நல்லது. நன்றி. வணக்கம். அடுத்த பதிவில் சந்திப்போம்.